كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِیْ ؕ اِنَّ اللّٰهَ قَوِیٌّ عَزِیْزٌ ۲۱ لَا تَجِدُ قَوْمًا
یُّؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْیَوْمِ الْاٰخِرِ یُوَآدُّوْنَ مَنْ حَآدَّ اللّٰهَ وَرَسُوْلَهٗ
وَلَوْ كَانُوْۤا اٰبَآءَهُمْ اَوْ اَبْنَآءَهُمْ اَوْ اِخْوَانَهُمْ اَوْ عَشِیْرَتَهُمْ ؕ اُولٰٓىِٕكَ
كَتَبَ فِیْ قُلُوْبِهِمُ الْاِیْمَانَ وَاَیَّدَهُمْ بِرُوْحٍ مِّنْهُ ؕ وَیُدْخِلُهُمْ جَنّٰتٍ
تَجْرِیْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِیْنَ فِیْهَا ؕ رَضِیَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا
عَنْهُ ؕ اُولٰٓىِٕكَ حِزْبُ اللّٰهِ ؕ اَلَاۤ اِنَّ حِزْبَ اللّٰهِ هُمُ الْمُفْلِحُوْنَ ۲۲ ع ۳ ع

## سورة الحشر مدنية وهي اربع وعشرون اٰية وثلاث ركوعات

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

سَبَّحَ لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِیْزُ الْحَكِیْمُ ۱
هُوَ الَّذِیْۤ اَخْرَجَ الَّذِیْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ مِنْ دِیَارِهِمْ
لِاَوَّلِ الْحَشْرِ ؔ ؕ مَا ظَنَنْتُمْ اَنْ یَّخْرُجُوْا وَظَنُّوْۤا اَنَّهُمْ مَّانِعَتُهُمْ حُصُوْنُهُمْ
مِّنَ اللّٰهِ فَاَتٰىهُمُ اللّٰهُ مِنْ حَیْثُ لَمْ یَحْتَسِبُوْا ۗ وَقَذَفَ فِیْ
قُلُوْبِهِمُ الرُّعْبَ یُخْرِبُوْنَ بُیُوْتَهُمْ بِاَیْدِیْهِمْ وَاَیْدِی الْمُؤْمِنِیْنَ ۗ
فَاعْتَبِرُوْا یٰۤاُولِی الْاَبْصَارِ ۲ وَلَوْ لَاۤ اَنْ كَتَبَ اللّٰهُ عَلَیْهِمُ
الْجَلَآءَ لَعَذَّبَهُمْ فِی الدُّنْیَا ؕ وَلَهُمْ فِی الْاٰخِرَةِ عَذَابُ النَّارِ ۳

وقف النبی صلی اللہ علیہ وسلم

21. "நிச்சயமாக நானும், என் தூதர்களும் மிகைத்து(வெற்றி பெற்று) விடுவோம்" என அல்லாஹ் எழுதிவிட்டான்; நிச்சயமாக அல்லாஹ் பலமிக்கவன்;(யாவரையும்) மிகைத்தவன்.

22. அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசங் கொண்ட சமூகத்தினரை, அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டிருக்கிறார்களே அவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காணமாட்டீர், அவர்கள் தங்களின் பெற்றோர்களாயினும், அல்லது தங்களின் ஆண்மக்களாயினும், அல்லது தங்களின் சகோதரர்களாயினும் அல்லது தங்கள் குடும்பத்தவராயினும் சரியே; (காரணம்) அத்தகையோர்_ அவர்களின் இதயங்களில் ஈமானை (விசுவாசத்தை அல்லாஹ்வாகிய) அவன் எழுதிவிட்டான்;மேலும் தன்னிடமிருந்து (வெற்றி எனும்) ரூஹைக் கொண்டு அவர்களைப் பலப்படுத்தியிருக்கிறான்; இன்னும் அவர்களைச் சுவனங்களில் நுழையச் செய்வான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; அல்லாஹ் அவர்களை பொருந்திக் கொண்டான்; அவனை அவர்களும் பொருந்திக் கொண்டார்கள்; அவர்கள் தான் அல்லாஹ்வின் கூட்டத்தினர்; அறிந்து கொள்வீராக! நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர்_ அவர்கள் தாம் வெற்றியாளர்கள்.

---

அத்தியாயம் : 59

## அல் ஹஷ்ர் _ ஒன்று திரட்டுதல்

வசனங்கள் : 24 மதனீ ருகூஉகள் : 3

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன; அவன் தான் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

2. அவன் எத்தகையவனென்றால், வேதத்தையுடையோரில் நிராகரித்தார்களே அவர்களை அவர்களுடைய வீடுகளிலிருந்து (மதீனாவிலிருந்து ஷாம் தேசத்தின் பால்) முதல் வெளியேற்றத்திற்காகவேண்டி வெளியேற்றினான்; அவர்கள் (தங்கள் வீடுகளிலிருந்து) வெளியேறிவிடுவார்களென்று நீங்கள் எண்ணவில்லை; மேலும் அவர்கள் தங்களுடைய கோட்டைகள், அல்லாஹ்வை விட்டுத் தங்களைத் தடுத்துக்கொள்ளுபவை என்று நிச்சயமாக எண்ணிக் கொண்டிருந்தார்கள்; ஆகவே, அவர்கள் எண்ணிப்பார்த்திராதவிதத்தில் அல்லாஹ் அவர்களிடம் (தனதுவேதனையைக்கொண்டு) வந்துவிட்டான்; மேலும், அவர்களுடைய உள்ளங்களில் திகிலைப்போட்டான்; (அதனால்) அவர்கள் தம் கரங்களாலும், விசுவாசிகளின் கரங்களாலும் தம் வீடுகளைப் பாழ்படுத்திக் கொண்டனர்; பார்வை (விளக்கங்)கள் உடையோரே, (இதன்மூலம் உபதேசம்பெற்று) நீங்கள் படிப்பினை பெறுவீர்களாக!

3. மேலும், அல்லாஹ் அவர்களின்மீது (அவர்கள் குடும்ப சகிதம் அவர்களுடைய ஊரிலிருந்து) வெளியேறுவதை விதித்திருக்காவிடில், இவ்வுலகத்திலேயே அவன் அவர்களை வேதனை செய்திருப்பான்; அன்றியும், மறுமையில் அவர்களுக்கு (நரக) நெருப்பின் வேதனை உண்டு.

ذٰلِكَ بِاَنَّهُمْ شَآقُّوا اللّٰهَ وَرَسُوْلَهٗ ۚ وَمَنْ يُّشَآقِّ اللّٰهَ فَاِنَّ اللّٰهَ
شَدِيْدُ الْعِقَابِ ﴿۴﴾ مَا قَطَعْتُمْ مِّنْ لِّيْنَةٍ اَوْ تَرَكْتُمُوْهَا قَآئِمَةً عَلٰٓى
اُصُوْلِهَا فَبِاِذْنِ اللّٰهِ وَلِيُخْزِيَ الْفٰسِقِيْنَ ﴿۵﴾ وَمَآ اَفَآءَ اللّٰهُ عَلٰى
رَسُوْلِهٖ مِنْهُمْ فَمَآ اَوْجَفْتُمْ عَلَيْهِ مِنْ خَيْلٍ وَّلَا رِكَابٍ وَّلٰكِنَّ
اللّٰهَ يُسَلِّطُ رُسُلَهٗ عَلٰى مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۶﴾
مَآ اَفَآءَ اللّٰهُ عَلٰى رَسُوْلِهٖ مِنْ اَهْلِ الْقُرٰى فَلِلّٰهِ وَلِلرَّسُوْلِ
وَلِذِي الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَابْنِ السَّبِيْلِ ۙ كَيْ لَا
يَكُوْنَ دُوْلَةًۢ بَيْنَ الْاَغْنِيَآءِ مِنْكُمْ ؕ وَمَآ اٰتٰىكُمُ الرَّسُوْلُ فَخُذُوْهُ ۚ وَ
مَا نَهٰىكُمْ عَنْهُ فَانْتَهُوْا ۚ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ﴿۷﴾ وقف لازم
لِلْفُقَرَآءِ الْمُهٰجِرِيْنَ الَّذِيْنَ اُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ وَاَمْوَالِهِمْ
يَبْتَغُوْنَ فَضْلًا مِّنَ اللّٰهِ وَرِضْوَانًا وَّيَنْصُرُوْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ ؕ
اُولٰٓئِكَ هُمُ الصّٰدِقُوْنَ ﴿۸﴾ وَالَّذِيْنَ تَبَوَّؤُ الدَّارَ وَالْاِيْمَانَ مِنْ
قَبْلِهِمْ يُحِبُّوْنَ مَنْ هَاجَرَ اِلَيْهِمْ وَلَا يَجِدُوْنَ فِيْ صُدُوْرِهِمْ
حَاجَةً مِّمَّآ اُوْتُوْا وَيُؤْثِرُوْنَ عَلٰٓى اَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ
خَصَاصَةٌ ؕ وَمَنْ يُّوْقَ شُحَّ نَفْسِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۹﴾

4. இது,(ஏனென்றால்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்து (கொண்டு அவர்களை விரோதித்து)விட்டார்கள் என்பதினாலாகும்; இன்னும் எவர் அல்லாஹ்விற்கு மாறுசெய்கின்றாரோ நிச்சயமாக அல்லாஹ்(அவரைத்) தண்டிப்பதில் மிகக்கடினமானவன்.

5. (விசுவாசிகளே!) நீங்கள் (அவர்களுடைய) பேரீத்த மரங்களை வெட்டியதும், அல்லது (வெட்டாது) அவைகளின் வேர்களின்மீது நிற்கக்கூடியதாக நீங்கள் அவைகளை விட்டு வைத்ததும் அல்லாஹ்வின் அனுமதி கொண்டும், அந்தப் பாவிகளை அவன் இழிவுபடுத்துவதற்காகவுமாகும்.

6. மேலும், அவர்களிடமிருந்து அல்லாஹ் தன்னுடைய தூதருக்கு எதை மீட்டுக் கொடுத்தானோ அ(தைப்பெறுவ)தற்காக(விசுவாசிகளே!) நீங்கள் குதிரையையோ, ஒட்டகத்தையோ ஓட்டவில்லை. எனினும்,அல்லாஹ் தான் நாடியவர்களின்மீது தன்னுடைய தூதர்களை ஆதிக்கம் செலுத்தச் செய்கிறான்; மேலும் அல்லாஹ் ஒவ்வொருபொருளின் மீதும் ஆற்றலுடையவன்.

7. (வெற்றிகொள்ளப்படும் அனைத்து)ஊரார்களிடமிருந்து தன் தூதருக்கு அல்லாஹ் மீட்டுக் கொடுத்தானே அவை, (அவற்றில்) அல்லாஹ்வுக்கும்,(அவனுடைய) தூதருக்கும்,(அவருடைய) பந்துக்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும் உரியதாகும்; செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மட்டுமே சுற்றிக்கொண்டிருக்காமல் இருப்பதற்காக, (இவ்வாறு பங்கீடு செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்) அன்றியும், (நம்முடைய) தூதர் உங்களுக்கு எதைக்கொடுத்தாரோ அதை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக்கொள்ளுங்கள். அவர் எதனை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்துகொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிக்க கடினமானவன்.

8. தங்கள் வீடுகளையும், தங்கள் பொருட்களையும் விட்டு (அக்கிரமமாக மக்காவிலிருந்து) வெளியேற்றப்பட்டார்களே அத்தகைய ஹிஜ்ரத்துச் செய்தவர்களான ஏழைகளுக்கும் (அப்பொருளில் பங்குண்டு). அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பேரருளையும், (அவனுடைய) பொருத்தத்தையும் தேடுகின்றனர்; இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் உதவி செய்கின்றனர்; இவர்கள் தாம் ("ஸாதிகூன்" என்னும்) உண்மையாளர்கள்.

9. இன்னும் (முஹாஜிரீன்களாகிய) அவர்களுக்கு முன்பே (மதீனாவில்) வீட்டையும், (அல்லாஹ்வின் மீது) விசுவாசம் கொள்வதையும் (கலப்பற்றதாக்கிக்) கொண்டிருந்தார்களே அத்தகைய (அன்ஸாரிகளான)வர்கள், தம்பால் "ஹிஜ்ரத்து"ச்செய்து வந்தோரை நேசிப்பார்கள்; மேலும், (ஹிஜ்ரத்துச் செய்து வந்த) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதைப் பற்றி தங்கள் நெஞ்சங்களில் காழ்ப்புணர்ச்சியைப்பெறமாட்டார்கள்;மேலும் தங்களுக்கு(கடும்)தேவையிருந்த போதிலும், தங்களைவிட(முஹாஜிரீன்களான அவர்களை)த் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இன்னும் எவர் தன் உலோபத்தனத்திலிருந்து காக்கப் பட்டாரோ, அத்தகையோர் தாம் வெற்றி பெற்றவர்கள்.

وَالَّذِيْنَ جَآءُوْ مِنْۢ بَعْدِهِمْ يَقُوْلُوْنَ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِاِخْوَانِنَا
الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ
اٰمَنُوْا رَبَّنَآ اِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ ١٠ اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ نَافَقُوْا
يَقُوْلُوْنَ لِاِخْوَانِهِمُ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ لَئِنْ
اُخْرِجْتُمْ لَنَخْرُجَنَّ مَعَكُمْ وَلَا نُطِيْعُ فِيْكُمْ اَحَدًا اَبَدًا ۙ وَّاِنْ
قُوْتِلْتُمْ لَنَنْصُرَنَّكُمْ ۭ وَاللّٰهُ يَشْهَدُ اِنَّهُمْ لَكٰذِبُوْنَ ١١ لَئِنْ اُخْرِجُوْا
لَا يَخْرُجُوْنَ مَعَهُمْ ۚ وَلَئِنْ قُوْتِلُوْا لَا يَنْصُرُوْنَهُمْ ۚ وَلَئِنْ نَّصَرُوْهُمْ
لَيُوَلُّنَّ الْاَدْبَارَ ۣ ثُمَّ لَا يُنْصَرُوْنَ ١٢ لَاَنْتُمْ اَشَدُّ رَهْبَةً
فِيْ صُدُوْرِهِمْ مِّنَ اللّٰهِ ۭ ذٰلِكَ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَفْقَهُوْنَ ١٣
لَا يُقَاتِلُوْنَكُمْ جَمِيْعًا اِلَّا فِيْ قُرًى مُّحَصَّنَةٍ اَوْ مِنْ وَّرَاۗءِ
جُدُرٍ ۭ بَاْسُهُمْ بَيْنَهُمْ شَدِيْدٌ ۭ تَحْسَبُهُمْ جَمِيْعًا وَّقُلُوْبُهُمْ
شَتّٰى ۭ ذٰلِكَ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَعْقِلُوْنَ ١٤ ۚ كَمَثَلِ الَّذِيْنَ
مِنْ قَبْلِهِمْ قَرِيْبًا ذَاقُوْا وَبَالَ اَمْرِهِمْ ۚ وَلَهُمْ عَذَابٌ
اَلِيْمٌ ١٥ ۚ كَمَثَلِ الشَّيْطٰنِ اِذْ قَالَ لِلْاِنْسَانِ اكْفُرْ ۚ فَلَمَّا كَفَرَ
قَالَ اِنِّىْ بَرِيْۗءٌ مِّنْكَ اِنِّىْٓ اَخَافُ اللّٰهَ رَبَّ الْعٰلَمِيْنَ ١٦

10. மேலும், அவர்களுக்குப் பின் வந்தார்களே அத்தகையவர்கள் "எங்கள் இரட்சகனே! எங்களையும், விசுவாசம் கொள்வதில் எங்களை முந்தி விட்டார்களே அத்தகைய எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள் வாயாக! விசுவாசங்கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஏற்படுத்தாதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன்; மிகக் கருணையுடையவன்" என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள்.

11. (நபியே!) நயவஞ்சகர்களாக ஆகிவிட்டார்களே அவர்களை நீர் பார்க்கவில்லையா? அவர்கள், வேதத்தையுடையோர்களில் உள்ள நிராகரித்து விட்டோரான தங்கள் சகோதரர்களிடம், "நீங்கள் (உங்கள் இல்லத்தை விட்டு) வெளியேற்றப்பட்டால், உங்களுடன் நாங்களும் நிச்சயமாக வெளியேறி விடுவோம்; மேலும், உங்கள் விஷயத்தில், (உங்களுக்கு விரோதமாக) நாங்கள் எவருக்கும் ஒரு காலத்திலும் கீழ்ப்படிய மாட்டோம்; உங்கள் மீது போர் தொடுக்கப்பட்டால், நிச்சயமாக நாம் உங்களுக்கு உதவியும்புரிவோம்" என்று கூறுகின்றனர்; அல்லாஹ்வோ நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள் என்று சாட்சியங் கூறுகின்றான்.

12. (ஏனென்றால்), அவர்கள் வெளியேற்றப்பட்டால், இவர்கள் அவர்களுடன் வெளியேறிச் செல்லமாட்டார்கள்; அவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டாலோ அவர்களுக்கு உதவிபுரியமாட்டார்கள்; அவர்களுக்கு இவர்கள் உதவி செய்(ய முன்வந்)த போதிலும், நிச்சயமாகப் புறங்காட்டியே அவர்கள் ஓடிவிடுவார்கள். பின்னர், (எவராலுமே) அவர்கள் (எத்தகைய) உதவியும் செய்யப்படமாட்டார்கள்.

13. திட்டமாக நீங்கள் அவர்களுடைய நெஞ்சங்களில், பயத்தால் அல்லாஹ்வை(ப் பற்றிய பயத்தை) விட மிக்க அதிகமானவர்களாக இருக்கிறீர்கள்; அது நிச்சயமாக அவர்கள் விளங்கிக் கொள்ளமுடியாத சமூகத்தினராக இருப்பதினாலேயாகும்.

14. (கோட்டைகளால்) அரண் அமைக்கப்பட்ட ஊர்களிலோ, அல்லது சுவர்களுக்கப்பாலோ அல்லாமல் அவர்கள் அனைவரும் (ஒருங்கிணைந்தவர் களாக) உங்களுடன் யுத்தம் புரியமாட்டார்கள்; அவர்களுக்கு மத்தியிலே அவர்களின் சண்டை கடினமாகயிருக்கும். அவர்களை ஒன்றுபட்டிருப்பதாக நீர் எண்ணுகின்றீர்; (ஆனால்) அவர்களுடைய இதயங்களோ சிதறிக்கிடக்கின்றன; அ(தன்காரணமாவ)து நிச்சயமாக அவர்கள் அறியாதவர்களான சமூகத்தார் என்பதினாலாகும்.

15. (அவர்களுக்கு உதாரணமாவது:) அவர்களுக்கு முன்னர் (காலத்தால்) சமீபத்தில் உள்ளோரின் உதாரணத்தைப் போன்றாகும்; அவர்கள் தங்களுடைய செயல்களுக்குரிய தீய பலனை( பத்ரு யுத்தத்தில்) சுவைத்தார்கள்; இன்னும் (மறுமையில்) அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

16. (இவர்களுக்கு உதாரணம்:) ஷைத்தானுடைய உதாரணத்தைப் போன்றாகும். அவன் மனிதனிடம், "நீ (அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும்) நிராகரித்து விடு" என்று கூறிய சமயத்தில் (அதைக்கேட்டுப்) பின்னர், அவன் நிராகரித்து விட்டபொழுது (ஷைத்தான் அவனிடம்,) "நிச்சயமாக நான் உன்னை விட்டு நீங்கிக்கொண்டேன்; அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு நிச்சயமாக நான் பயப்படுகிறேன்" என்று கூறினான்.

فَكَانَ عَاقِبَتَهُمَآ اَنَّهُمَا فِى النَّارِ خَالِدَيْنِ فِيْهَا ؕ وَذٰلِكَ
جَزٰٓؤُا الظّٰلِمِيْنَ ﴿۱۷﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَلْتَنْظُرْ ع ۲/۵
نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ ۚ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ
بِمَا تَعْمَلُوْنَ ﴿۱۸﴾ وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ نَسُوا اللّٰهَ فَاَنْسٰهُمْ
اَنْفُسَهُمْ ؕ اُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿۱۹﴾ لَا يَسْتَوِىْٓ اَصْحٰبُ
النَّارِ وَاَصْحٰبُ الْجَنَّةِ ؕ اَصْحٰبُ الْجَنَّةِ هُمُ الْفَآئِزُوْنَ ﴿۲۰﴾
لَوْ اَنْزَلْنَا هٰذَا الْقُرْاٰنَ عَلٰى جَبَلٍ لَّرَاَيْتَهٗ خَاشِعًا
مُّتَصَدِّعًا مِّنْ خَشْيَةِ اللّٰهِ ؕ وَتِلْكَ الْاَمْثَالُ نَضْرِبُهَا
لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ ﴿۲۱﴾ هُوَ اللّٰهُ الَّذِىْ لَآ اِلٰهَ
اِلَّا هُوَ ۚ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ ۚ هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ ﴿۲۲﴾
هُوَ اللّٰهُ الَّذِىْ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ
الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ ؕ سُبْحٰنَ اللّٰهِ
عَمَّا يُشْرِكُوْنَ ﴿۲۳﴾ هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ
الْاَسْمَآءُ الْحُسْنٰى ؕ يُسَبِّحُ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ
وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۲۴﴾ ع ۳/۶

17. ஆகவே, நிச்சயமாக(ஷைத்தானும், நிராகரித்த மனிதனுமாகிய) அவ்விருவரும் நரகத்தில் அதில் அவ்விருவரும் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள் என்பதே அவ்விருவருடைய முடிவாக ஆகிவிட்டது; மேலும், அது அநியாயக்காரர்களின் கூலியாகும்.

18. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்; ஒவ்வோர் ஆத்மாவும்(மறுமை)நாளைக்காக எதனை முற்படுத்தியிருக்கிறது என்பதைப் பார்க்கட்டும்; இன்னும், அல்லாஹ்வை நீங்கள் பயந்து (நடந்து) கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவன்.

19. (விசுவாசிகளே!) அல்லாஹ்வை (நிராகரித்து அவனை முற்றிலும்) மறந்துவிட்டார்களே அத்தகையவர்களைப் போன்று நீங்களும் ஆகிவிட வேண்டாம்; ஏனென்றால், (அல்லாஹ்வாகிய) அவன் (அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நற்பாக்கியங்களிலிருந்து) அவர்கள் தங்களையே மறக்குமாறு செய்துவிட்டான்; அத்தகையோர் தாம் (அல்லாஹ்வின் வழிபாட்டிலிருந்து) வெளியேறியவர்(களானபாவி)களாவர்.

20. நரகவாசிகளும், சொர்க்கவாசிகளும் சமமாகமாட்டார்கள்; சொர்க்கவாசிகள்_ அவர்கள் தாம் வெற்றியடைந்தவர்கள்.

21. (நபியே!) இந்தக்குர்ஆனை ஒரு மலையின் மீது நாம் இறக்கிவைத்திருந்தால், அல்லாஹ்வின் பயத்தால் பணிந்ததாக, பிளந்துவிடக் கூடியதாக அதை நிச்சயமாக நீர் கண்டிருப்பீர்; மேலும், அந்த உதாரணங்கள்_அவற்றை மனிதர்களுக்கு அவர்கள் சிந்திப்பதற்காகவே _ நாம் கூறுகிறோம்.

22. "அவன் (தான்) அல்லாஹ் ; அவன் எத்தகையவனென்றால் அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு ) நாயன் இல்லை; (அவன்) மறைவானதையும், வெளிப்படையானதையும் நன்கறிகிறவன்; அவனே அளவற்ற அருளாளன்; மிகக் கிருபையுடையவன்.

23. அவன்(தான்) அல்லாஹ்; அவன் எத்தகையவனென்றால் அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை;(அவன் தான் உண்மையான)பேரரசன்; பரிசுத்தமானவன்; சாந்தி அளிப்பவன்; அப்பயமளிப்பவன்; கண்காணிப்பவன்; (யாவரையும்) மிகைத்தவன்; அடக்கி ஆளுபவன்; பெருமைக்குரியவன்_ அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்.

24. அவன்(தான்) அல்லாஹ்; படைப்பவன்; (அவனே படைப்புகளை ஒழுங்குபடுத்தி) உண்டாக்குபவன் ;(அவனே படைப்பினங்களின்) உருவத்தை அமைப்பவன்; அவனுக்கு அழகான பெயர்களிருக்கின்றன; வானங்களிலும், பூமியிலும் உள்ளவை (அனைத்தும்) அவனையே துதிசெய்கின்றன; அவனே (யாவரையும்)மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.